# பணயக் கைதிகளை கொலைசெய்யப்போவதாக

# மாணவர்கள் அறிவிப்பு!

## முற்றுகை 'நாடகம்' எட்டுநாளாக நீடிப்பு

(தெஹ்ரான்)

ஈரானிய தலைநகரான தெஹ்ரானில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ள அறுபது அமெரிக்க அதிகாரிகளையும் கொலை செய்யப்போவதாக அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டுள்ள புரட்சி மாணவர்கள் தலைவர் நேற்று அறிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி ஸ்தாபனமான 'ராய்ட்ட'ருக்கு நேற்று அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட தகவலை புரட்சி மாணவர் தலைவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகள் கடந்த எட்டு நாட்களாக தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்

இந்த அதிகாரிகளைப் பணயம் வைத்துள்ள புரட்சி மாணவர்களின் தலைவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் ஈரானிய ஷாவை அமெரிக்கா இங்கு அனுப்பிவைக்காவிட்டால் இங்கு சிறைப் பிடிக்கப்பட்டுள் அமெரிக்கா அதிகாரிகள் கொலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

EELA NADU

மலர் 21 ஐப்பசி 27 ஜுல்ஹஜ் 22 இதழ் 274

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-11-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
PERIODICALS

### பொலிஸார் கைதுசெய்யும் இளைஞர்களை

# ராணுவத்திடம் ஒப்படைத்தால் பெற்றோருக்கு அறிவிக்கப்படும்

## நல்லுறவுக் கருத்தரங்கில் யாழ். பொலிஸ் அதிபர்

(நமது நிருபர்)

(யாழ்ப்பாணம்)

"பொலிசாரினால் கைதுசெய்யப்படும் இளைஞர்கள், ராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்படும்போது, இதுபற்றி அவர்களின் பெற்றோருக்கு உடனடியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று யாழ். பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீராவியடி சனசமூகநிலையத்தில் நடைபெற்ற பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் கருத்தரங்கில், மேயர் திரு இராசா விசுவநாதன் கேட்ட கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையிலேயே பொலிஸ் அதிபர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ் மாநகரமுதல்வர் திரு விசுவநாதன் அங்கு உரையாற்றுகையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை இராணுவத்தினர் கொண்டு சென்றுவிடுகின்றனர். பெற்றோர் பொலிஸ் நிலையம் சென்றால் தமக்கு எதுவும் தெரியாது என்று கையை விரிக்கின்றனர்" என்றார்.

பொலிஸ் அதிபர் திரு. விக்கிரமசூரியா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"புத்தகப் படிப்பினாலோ அன்றிப் பட்டப்படிப்பினாலோ மட்டும் நல்லொழுக்கத்தை அடைந்துவிட முடியாது. ஒழுக்கம் இயற்கையாகவே வரவேண்டும்.

"இந்த நாட்டிலுள்ள குற்றச்செயல்களில் கூடுதலாக ஈடுபடுபவர்கள் இளைஞர்களே. குற்றச்செயல் புரிபவர்களைப் பொலிசாருக்குப் பொதுமக்கள் காட்டிக் கொடுக்க முன்வரவேண்டும். அதன் மூலம் குற்றச்செயல்களைக் குறைக்கமுடியும்."

தவறான பாதையில் வாகனங்களில் செல்பவர்களைப் பொலிசார் கைதுசெய்து கோட்டில் வந்து வாக்கினை எடுக்கும்படி கூறுகிறார்கள்; நீங்கள் உங்களது அடையாள அட்டையைக் காட்டினால் உங்களின் வாக்கினைக் கொண்டுசெல்லக்கூடியதாகவும் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத்தக்கதாகவும் ஒழுங்குசெய்யப்படும்.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் இனிமேல் படங்களை இறக்குமதிசெய்ய முடியும். இறக்குமதி செய்யப்பட்ட படங்கள் தணிக்கைசெய்யப்பட்ட பின்பே படமாக்கப்பட அனுமதிக்கப்படும். சட்டத்திற்குப் புறம்பான முறையில்

(6-ம் பக்கம் பார்க்க)

## 10 மாதத்தில் மட்டும் ஒரு கோடிரூபா திருட்டு

(யாழ்ப்பாணம்)

"ஜனவரி மாதத்தில் இருந்து அக்டோபர் மாதத் திற்கிடையில் மட்டும் வட பகுதியில் வீடுடைப்பு, வழிப்பறி, கொள்ளை, திருட்டு, ஆகிய குற்றச்செயல்கள் மூலம் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான திருட்டு நடைபெற்றுள்ளது. இதில் நகைத்திருட்டு மட்டும் சுமார் 6 லட்சத்து 24 ஆயிரத்துக்கும் அதிகமானவை"

பொலிசார் நகைக்கடைகளின் உரிமையாளர்கள் நல்லுறவுக் கருத்தரங்கு யாழ் நகரில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் பொலிஸ் அதிபர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரியா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி கருத்தரங்கில் யாழ் மாவட்டத்திலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி யாவரும் 103 நகைக்கடை உரிமையாளர்களும் கலந்துகொண்டனர். யாழ் பொலிஸ் அதிபர் தொடர்ந்து தமது தலைமையுரையில் கூறியதாவது:

"பணம் தேவைப்படுவதால் களவு நடைபெறுகிறது. நகைகளை கடைகளில் விற்கக் கொண்டுவந்தால் அவற்றை மூன்று கிழமைக்கு நீங்கள் அழிக்கக்கூடாது. மூன்று கிழமைக்குப் பின் அழிப்பதால் அது களவுநகைகள் என்றால் நீங்கள் சாட்சிகளாக மாத்திரமே கருதப்படுவீர்கள். அப்படியல்லாத பட்சத்தில் நீங்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவீர்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ரயில் தடம் புரண்டதில் விஷவாயு பரவியது!

### மக்களை வெளியேறுமாறு உத்தரவு

மொசிஸாகா, நவ. 12

கனடாவில் மொசிஸாகோ நகரில் விஷவாயு ஏற்றிச்சென்ற ஒரு ரயில் வண்டி தடம் புரண்டதில், வாயுத்தாங்கிகள் வெடித்துவிட்டன. இதன் விளைவாக அப்பகுதி மக்களை உடனடியாக வெளியேறுமாறு அரசு கேட்டுள்ளது.

குளோரின் வாயுவை ஏற்றிச்சென்ற ரயில் வண்டி தடம் புரண்டதால் தாங்கிகள் உடைந்து வாயு பரவத் தொடங்கியது என்றும் இதனால் அப்பகுதியிலுள்ள இரண்டரை லட்சம் மக்கள் அந்த விஷவாயுவை சுவாசிப்பதை தடுப்பதற்காக உடனடியாக அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிப்பட்டது.

ரயில் தடம் புரண்ட பகுக்கு மிக அண்மையில் உள்ள மக்கள் தலைச்சுற்று, கண் எரிவு போன்றவற்றிற்கு ஆளாகி மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். (ஏ)

### கார்ட்டரின் நடவடிக்கையை கண்டித்து

## ஈரான் மாணவர்கள் 5 நாள் உண்ணாவிரதம்

(தெஹ்ரான்)

ஈரானில் அமெரிக்க அதிகாரிகளை தடுத்துவைத்திருக்கும் மாணவர்கள், அமெரிக்க அதிபரின் நடவடிக்கைகளைக்



கண்டித்து ஐந்துநாள் உண்ணாவிரதத்தை நேற்றுக்காலை ஆரம்பித்தனர்.

தமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அமெரிக்கா, ஷாவை ஈரானுக்கு திருப்பி அனுப்பும் என்று நூறுவீத நம்பிக்கை தமக்கு உண்டு என்று கூறும் புரட்சிமாணவத் தலைவர் தாம் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியுடன் தொடர்புகொண்டு தமது கருத்தைக் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் ஈரான் மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண்டித்து அமெரிக்க மக்கள் பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

இதற்கிடையே அரசியல்வாதிகள் தமது சொந்தநலன் கருதி இந்த விடயத்தை மிகைப்படுத்த வேண்டாமென்றும், மக்களைப் பொறுமையாக இருக்குமாறும் அமெரிக்க வெளிநாட்டமைச்சு கேட்டுள்ளது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ராஜதந்திர முயற்சிகளால் ஈரானிய அரசை திருப்திப்படுத்த முடியும் என்றும், ஆனால் பணயக் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது பற்றி இப்போது கூற முடியாதிருக்கிறது என்றும் கூறினார். (ஏ)

# மேடைநாடக முன்னோடி சங்கரதாஸ் சுவாமிகள்

மேடையிலே நாடகத் தமிழை வளர்த்தவர்களில் முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். இன்றைய தமிழ்மேடை நாடகங்களுக்கு அடிப்படையாக விளங்கத் தக்க சில முறைமைகளை ஏற்படுத்தித் தந்தவர் என்ற வகையில் அவரை நினைவு கூர்வது அவசியமாகின்றது. இவர் சுமார் 40 நாடகங்களை எழுதியுள்ளார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இவரை "நாடக உலகின் இமயமலை" என்று புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார். பல்லோவிரசங்களாகவன்றி மக்களைச் சுவைக்கச் செய்த நாடகங்களை இவர் தயாரித்தளித்தார். பெரும்பாலும் புராண இதிகாசக்கதைகள் தழுவிய வகையிலேயே அக்காலத்தில் பெரும்பாலான நாடகங்கள் அமைந்தன. அதன் பின்னையும் அந்நாளில் மக்களை மகிழ்வித்த நாடகங்களாகவே கணிக்கப்பட்டன. இன்றைய சில நாடகங்களைப் போலவோ, பெண்கள், மனைவி, குழந்தைகளுடன் கூசாமல் பார்க்கத்தக்க நாடகங்களாக அமையமைந்தன. தொழில் முறை நாடகங்கள் பலவற்றை தோற்றுவித்த பெருமைக் குரியவர் சங்கரதாஸ்சுவாமிகள்.

1918ம் ஆண்டு வாக்கில் நாடகமேடையில் பெரும்பகுதி பாடலாகவே இருந்தது. தமிழிசைவல்லாரே நாடகநடிகர்களாக விளங்கிய காலகட்டம் அது பாடத்தெரியவில்லை என்றால் அந்நாளில் நாடகக்குழுவில் எவரையும் சேர்த்துக் கொள்ளுவது வழக்கமில்லை.

நாடகமேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 'சமரச சன்மார்க்க நாடகசபா'வில் பிரதான பங்குகொண்டு பல பிரபல்யமிக்க நடிகர்களை உருவாக்கியவர் எஸ் ஜி கிட்டப்பாவும் அதே நாடகசபையில் சுவாமிகளிடம் பயின்றவர் தாம்.

அவ்வை ஷண்முகம், சுவாமிகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:

"தமிழ் நாடக மேடையை வளர்த்த தலைமை ஆசான் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். மகாவித்துவான் சஞ்சிராமாண் பூண்டி யாபிள்ளையின் தத்துப்புத்திரர் என்பதை உணரும்போது இசை உலகிற்கும் நாடக உலகிற்கும் இருந்து வந்த நீண்டகாலத் தொடர்பு நமக்கு நன்கு தெரிகிறது. தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே நாடகமேடை மூலம் தமிழ் இசையை வளர்த்த பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சீர்காழி அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், சங்கரதாஸ்சுவாமிகள், ஏகை சிவசண்முகம் பிள்ளை முதலியோர் ஆவர்.

சங்கரதாஸ் சுவாமிகள், நாடகங்களுக்கு மட்டுமல்லாது தனிப்பட்ட தோத்திரப்பாக்களும் ஏராளமாகப்பாடியுள்ளார். "கருப்புசாமி கண்பாரையா" "மதுரை நகர்க்கு வாருமைய்" "தாயே மீனாட்சி உன் தனயன் வேலனுக்கென் மேல் தயவு செய்யச் சொல்லம்மா" என்ற பாடல்களைக் கோனேரி ராஜபுரம் வைத்தியநாத பாகவதர் அந்நாளில் பாடிக்கொண்டிருந்ததாக மிருதங்க வித்துவான் பழனி முத்தையாபிள்ளை சொல்லக்கேட்டிருக்கிறேன். திருமதி கே பி சுந்தராம்பாள் பாடும் "ஞானப்பழத்தைப் பிழிந்து ரசமன்பிலொ" என்றபாடல் சங்கரதாஸரின் தண்டபாணிப் பதிகப்பாடலேயாகும். இவ்வாறு இசையரங்குகளில் பாடுவதற்குரிய சுவாமிகளின் எத்தனையோ பாடல்கள் இருக்கின்றன. அவையனைத்தும் சீரிய கருத்துக்கள் நிறைந்த உருக்கமான பக்திப் பாடல்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்".

"பக்திரச கீர்த்தனை" என்னும் பெயரில் அச்சில் வெளிவந்த சுவாமிகளின் நூலுக்கு அவர்களே எழுதிய முகவுரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"தற்காலம் இசைத்தமிழின் இலக்கண நூல் காணக் கிடைக்காதாயினும் அங்கிங்கு சிதறிப் பல நூல்களிலும் உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்ட சிற்சில சூத்திரங்களையும் வாக்கியங்களையும் ஆதாரமாகக்கொண்டு இசைத்தமிழின் பாகுபாடு இத்தன்மையது எனச் சங்ககாலப் புலவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனரென்று முன்னால் உரையாசிரியர்கள் ஒருவகையாக நியமித்துச்செல்கின்றனர். அந்நியமங்கொண்டு ஊகிப்பதற்கு இசைத்தமிழுலகுக்குத் தென்படாதிராது. பதங்களென்றும், ஜாவளிகளென்றும் கீர்த்தனைகளென்றும் சிந்துகளென்றும், கும்மிகளென்றும், இக்காலத்தில் வழங்கிவருவனவெல்லாம் இதன்பாற் பட்டனவேயாகும். பாடல் என்பதற்குப் பொருள் தெரியாதவரும், பாடுங்காலம் இது வாகையாலும் 'இப்படிப் பாடுவதற்கு விதியென்ன' என்று கேட்போரில்லாத நிலையுடைமையினாலும் எவரும் பாடிப் பல வழியிலும் வெளிப்படுத்தி, இசைத்தமிழ் என்னும் பகுதியை மிகுதியும் ஆபாசப்படுத்தலாயினர். அறிவறிந்த முதியரும் அவைகளை அருவருத் தொழிந்தனரன்றி அவைகளைச் சிக்கறுத்துச் செறிவுபடுத்தப் புகுதலில்லாதவராயினர். அது காரணமாக, இக்காலத்தில் கீர்த்தனைகளும் பல தோன்றிச் சந்தவழுவும் தாளச்சோர்வுமுடைய பாடல்கள் மலியலாயின.

சுவாமிகளின் இந்த முகவுரை அவரது இசைத்தமிழ்ப் புலமைக்கு ஒரு சான்றாகும். பாடல் மூலம் 'குறள் நெறி'யினை எடுத்துக்காட்டி மக்களுக்கு நல்வழிபுகட்டும் சுவாமிகள் இறுதியில் எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி,

"சற்றுஞ் சந்தேகமில்லை குறளாகிய
சாத்திர மொன்றுமே போதும்
சர்வ கலாசார ஞானந் தருமது,
தன்னைப் படிப்பாயேல் போதும்" என்றுபாடுகிறார்.

சங்கீதத்தின் சாரத்தைப்பற்றிய சுவாமிகளின் இன்னொரு பாடலைப் பாருங்கள்.

"சங்கீத சாரமே
சாற்றவும் அபாரமாமே
அதி சதி லய வகை
மனமதை ஒருநிலை
தனிலுறவளி நாட்டும்-மதி
தனை நிஜமது காட்டும்-இக
தலமதில் அருள் கூட்டும்-ஒரு
சஞ்சலம் இல்லாமலோட்டும்

"தமிழே இறந்தது" என்று தொடங்கும் சுவாமிகளின் மற்றொரு பாடல் தமிழ் மொழிக்குரிய சிறப்பியல்புகளை வெளிக்காட்டி உள்ளக்கியதாகவும் பெரும் புலவர்களுடைய போற்றுதலுக்குரியதாயும் அமைந்திருக்கிறது

"தமிழ் நிலிற சிறந்தது
ஆரியத் துயர்ந்தது
அகத்தியனார் சிவனிடத்தில்
அடி சீர் தொடை எதுகை
தொடைசேர் தளையின்னை
ஆகும் பாவினம் சந்தமா
விரிந்த வண்ணத்
தமிழ்!
திணைபால் காட்டும் விகுதி
இறப்புப் பொதுப் பகுதி
சேர்ந்த விதங்களெல்லாம்
தென் மொழிக்கே தகுதி"

சுவாமிகளின் இலக்கண இலக்கியப் புலமைக்கு இப்பாடல் சான்றாகலாம் நாடகத் துறையில் நீங்கா இடம்பெறும் அவ்வை தி. க. சண்முகம் அவர்களுக்கு ஆசிரியராக வாய்த்தவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்

க. நாகேஸ்வரன்

# மக்கள் கருத்து

## கொக்குவில் நூல்நிலையத்தின் குறைகளை நீக்கவேண்டும்

கொக்குவிலில் பொதுநூல் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இது உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இதில் அங்கத்தவர்கள் புத்தகம் எடுப்பதற்குப்படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று. பாடசாலை மாணவர்களும், தொழில் பார்க்கும் இளைஞர்களும் இதனை உபயோகிக்கமுடியாத நிலையிலுள்ளது. காலை எட்டு மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரையும் இயங்குகிறது என்று பெயரளவிற்தான் சொல்லப்படுகிறதே தவிர, காலை ஒன்பது மணிக்குப் பிற்பாடே திறக்கப்படுகிறது. புத்தகங்கள் இரவல் எடுப்பதானால் பிற்பகல் 2-30 மணி வரையுமே எடுக்க முடிகிறது. இதனால் எட்டு மணிக்குப் பாடசாலைக்கும், தொழிலுக்கும் செல்வோர் நூலகத்தில் புத்தகம் இரவல் கொடுக்கும் நேரமாகிய 9-00 -2-30 மணிக்கிடையில் புத்தகங்களை மாற்றஞ்செய்ய முடியாதுள்ளது. உதவி நூலகர் ஒருவரே புத்தகங்களை இரவல்கொடுத்துவருகிறார் அவர் தொடர்ந்து பல நாட்கள் லீவில் சென்றால் அவ்வளவு நாட்களுக்கும் புத்தகங்களை மாற்றஞ்செய்யமுடியாமலுள்ளது. நூலகத்தில் உள்ள தரமான புத்தகங்கள் எல்லாம் புத்தகசாலையில் கட்டுவதற்குக் கொடுக்கப்பட்டுவிட்டன என்று தொடர்ந்து மூன்று மாதங்களாகக் கூறிவருகிறார்கள். தரமற்ற சில புத்தகங்களே நூலகத்தில் உள்ளன. சில புத்தகங்கள் வாசித்துக்கொண்டு செல்லும் புத்தகத்தின் நடுவில் உள்ள பக்கங்கள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுதோ நூலகர் பல நாட்களாக லீவில் சென்றுள்ளார். உதவி நூலகரோ கடந்த பல நாட்களாகப் புத்தகம் இரவல்தர மறுக்கிறார். இதற்கு எல்லாம் மேலாக நூலகத்தில் இருந்த பத்திரிகை படிக்கமுடியாதபடி நிறைய மூட்டைப்பூச்சிகள் குடிகொண்டுள்ளன. ஆகவே இவற்றையெல்லாம் கவனிக்காத நிர்வாகம், தண்டப் பணம் அறவிடுவதில் முன்னணியில் நிற்கிறது. இக்குறைகளை எல்லாம் நீக்கும்படியும், முக்கியமாகப் புத்தகம் இரவல் கொடுக்கும் நேரத்தை இரவு எட்டு மணி வரை நீடிக்கும் படியும் தொழில்பார்க்கும் என் போன்ற இளைஞர்களின் கோரிக்கையைச் செவிமடுக்கும்படி கொக்குவில் கிராமசபை விசேஷ ஆணையாளரையும், புதிதாக இடமாற்றம் பெற்றுவரும் நூலகரையும், உதவி நூலகரையும் கேட்டுக்கொள்கிறேன்

ந. சற்குணராஜா
புகையிரத வீதி,
கொக்குவில்.

## முல்லைத்தீவு பஸ் சேவை திருந்துமா?

நீண்ட காலமாக முல்லைத்தீவு டிப்போவினால் நடாத்தப்படும் பஸ் சேவைகள் சீரற்ற நிலையில் இருந்துவருகிறது. கடந்த வாரங்களில் முல்லைத்தீவு-வவனியா, முல்லைத்தீவு-மாங்குளம், முல்லைத்தீவு-கொக்கிளாய் சேவைகள் நேர அட்டவணைக்குப் புறம்பாகவும், சில சேவைகள் இரத்தாகியும், திருப்தியற்ற நிலையிலும் இருந்துவருகிறது.

கடந்த 7-11-79ந் திகதி காலை 5-45க்குப் புறப்பட வேண்டிய வவனியா பஸ் காலை 8-00 மணிக்கும், 6-15க்குப் புறப்படும் காலை உத்தரதேவி இணைப்பு மாங்குளம் பஸ் சேவை 8-00 மணிக்குப் புறப்பட்டமையால் விவசாயிகளும், கொழும்பு செல்லவேண்டிய பிரயாணிகளும் பெரும் சங்கடத்திற்குள்ளானார்கள். அத்தோடு காலை 5-45க்குத் தனியூற்று, முள்ளியவளை ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்சேவை அடிக்கடி இரத்தாகிவருகின்றது. இச்சேவை மிக நீண்ட காலமாக நடைபெற்றுவரும் சேவையாக இருந்தும் அடிக்கடி இந்த மந்தநிலை ஏற்படுகின்றது.

அத்தோடு முல்லைத்தீவுச் சாலையினால் நடாத்தப்படும் உள்ளூர்ச் சேவைகள் பாதிப்படைவதால் முல்லைத்தீவுக்கு அரசாங்க அலுவல்களுக்கு வரும் பொதுமக்கள், பாடசாலைப் பிள்ளைகள் உரிய நேரத்திற்குத் தமது இடங்களைச் சென்றடைவதற்கோ அல்லது திரும்பிச் செல்வதற்கோ பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

இது பற்றி எமது சங்கம் வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை அதிகாரிகளுடன் கடித மூலமும் சந்திப்புகள் மூலமும் தொடர்புகொண்டும் பலன் கிட்டவில்லை. போக்குவரத்துச்சபை அதிகாரிகள் முல்லைத்தீவுச் சாலைக்கு மேலதிக பஸ்வண்டிகள் உடன் அனுப்பப்படுமென்ற கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். வடபகுதிக்கு விரைவில் பஸ்வண்டிகள் அனுப்பவிருப்பதாக கௌரவ போக்குவரத்து அமைச்சர் கூறியிருந்ததனையும் பத்திரிகை மூலம் அறிந்தோம். இச்சந்தர்ப்பத்திலாவது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் போதிய பஸ்வண்டிகளை அனுப்பிவைப்பாரென்று நம்புகிறேன்.

சி. சரவணபவாநந்தன்
உப செயலாளர்,
முல்லைத்தீவு மாவட்ட
பிரயாணிகள் சங்கம்.

## புங்குடுதீவில் விற்பனைநிலையம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் விற்பனைத் திணைக்களம் மக்கள்கடையை திறந்துவைப்பதற்கு முன்னோடியாக, இழமைக்கு ஒருதினம் லொறி மூலம் வியாபாரம் செய்யப்பட்டு இம்மாதம் 10ம் திகதி விற்பனை ஆரம்பிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், விற்பனை திணைக்கள உதவி ஆணையாளர் திரு ச. பொ. பாலசிங்கம் ஆகியோர் விற்பனையை நேரில் பார்வையிட்டனர்.

இம்மாதம் 17ம் திகதியன்று விற்பனை நடைபெறும். அடுத்த மாதம் முதல் நிரந்தர விற்பனைக்கடையைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் கோரியுள்ளார். இதற்கென புங்குடுதீவு சந்தைப்பகுதியில் கட்டடம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

## 'சிறுதொழிலையும் சிறப்புடன் செய்ய வேண்டும்'

(சுழிபுரம்)

"இளைஞர்கள் இன்றைய சூழ்நிலையில் தொழிலில் ஏற்றத்தாழ்வுகளை மறந்து எத்தொழிலையும் ஏற்க முன்வர வேண்டும். ஒவ்வொரு தொழிலினதும் மகத்துவத்தை இளைஞர்சமுதாயம் ஏற்றுக்கொண்டு சிறு தொழிலாயினும் அதனைச் சிறப்புற ஆற்றுவதன் மூலம் சமூகத்திற்குத் தம்மாலான பணியினை ஆற்றத் தயங்கக் கூடாது"

இவ்வாறு வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற இராப் போசன விருந்து வைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் ச. தேவானந்தர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

விழாத் தலைவர் செல்வன் ச. தேவானந்தர் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரம்பரியத்தோடு பல்வேறு தியாகிகளினதும் சேவையாளர்களினதும் உயிர் மூச்சுக்கள் இரண்டறக் கலந்து நிற்கின்றன.

"இன்றைய சர்வதேசப் பிரச்சினைகளை எடுத்து நோக்கின் அவற்றின் அடிப்படையிலே இன, நிற, மத வேறுபாடுகளே தாண்டவமாடுகின்றன இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் இவ்வகையான இராப்போசன விருந்துகளில் வேறுபட்ட ஒரு கலாச்சாரச் சூழலில் தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, நாம் தமிழர் மட்டுமல்ல சர்வதேச மனித சமுதாயத்தின் பிரஜைகள் என்ற உணர்வு பெறுகின்றனர்"

கல்லூரி அதிபர் திரு ஏ கதிர்காமர், செல்வன் ப குமாரராஜன் ஆகியோரும் உரையாற்றினர். மன்றச் செயலாளர் செல்வன் ந. கைலாசன் நன்றி கூறினார். (கு)

## நாவலர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி

(கோப்பாய்)

நாவலர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு இருபாலை சைவ பரிபாலனசபையின் கொழும்பு கிளையினரால் நடாத்தப்படவுள்ள பேச்சுப்போட்டி டிசம்பர்மாதம் 8ந் திகதி கோப்பாய் தெற்கு கற்பகவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கோப்பாய் கிராமசபைக்குட்பட்ட பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கல்விநிறுவனங்கள், சமயஸ்தாபனங்கள் மூலமாகவே மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம் என்று சங்கத்தின் செயலாளர் திரு. க. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (கு)

★ மனித சமுதாயத்தின் எதிரி ★ பதவியிலிருந்து நீக்கவேண்டும்

# கார்ட்டர் மீது கொமேய்னி சீற்றம்;

# மாணவர்களுக்கும் ஆதரவு

## அமெரிக்கா அடிபணியக் கூடாது என்று கலாநிதி கீஸிங்கர் வலியுறுத்து

தெஹ்ரான், நவ 12

அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டர் மனித சமுதாயத்தின் எதிரி என்றும், அவர் மீது குற்றம்சாட்டப்பட்டு பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்றும் ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமேய்னி கூறியுள்ளார்.

மாணவர்களால் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க அதிகாரிகளை விடுவிக்குமாறு புனிதபாப்பரசர் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முகமாக நேற்று வானொலியில் உரையாற்றிய கொமேய்னி மேற்கண்டவாறு கூறியதுடன் தமது உரையில் மாணவர்களுக்கு பூரண ஆதரவும் தெரிவித்தார்.

இதேவேளையில் ஈரானிய மாணவர்களின் பயமுறுத்தலுக்கு அமெரிக்கா அடிபணிந்துவிடக்கூடாது என்று அமெரிக்காவின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் கலாநிதி கீஸிங்கர் தெரிவித்துள்ளார்.

மன்னர் ஷா பதவியிலிருந்து இறக்கப்பட்டதுமே அவரை அமெரிக்காவிற்கு அழைக்குமாறு தாம் பலதடவை ஜனாதிபதி கார்ட்டரை வற்புறுத்தியதாகவும் கூறிய கலாநிதி கீஸிங்கர், பணயக் கைதிகளை மீட்பதற்காக மன்னர் ஷாவை அமெரிக்கா திருப்பியனுப்பக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார். (ரு)

## அமெரிக்க வாலிபர் ஈரான் மாணவரால் சுட்டுக் கொலை!

வாஷிங்டன், நவ 12

அமெரிக்க வாலிபர் ஒருவர் ஈரானிய மாணவர் ஒருவரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் ஹொலராடோ மாநிலத்தில் ஈரானிய மாணவர்களுக்கெதிராக அமெரிக்க வாலிபர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றும் அப்போதே ஈரானிய மாணவர் ஒருவர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்மை அமெரிக்க வாலிபர்கள் துன்புறுத்தியதாலேயே தாம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக ஈரானிய மாணவர் தெரிவித்தார். இச்சம்பவத்தின்போது இரண்டு அமெரிக்க வாலிபர்களும் படுகாயமடைந்தனர்.

தற்போது ஈரானிய மாணவர்கள் 50 ஆயிரம் பேர் அமெரிக்காவில் இருக்கின்றார்கள். (ரு)

## "தேங்காயின் விலையை அதிகரிக்க அரசுமுடிவு"

### அமைச்சர் ஹேரத் தகவல்

(காலி)

அம்பலாங்கொடையில் தெங்கு பயிர்ச்செய்கை சபையின் பிரதேச அலுவலகத்தை தெங்குக்கைத்தொழில் அமைச்சர் திரு. ஹேரத் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர், சந்தைகளில் தேங்காயைத் தவிர, மற்றைய பொருட்களின் விலைகளையும் இறக்குமதி செய்தல்களைக் காணலாம் என்றார்

தேங்காயின் விலையைக் கட்டவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கம் உரத்தின் விலையைக்குறைத்ததின் மூலம் தெங்கு உற்பத்தியாளர்கள் எதிர்காலத்தில் நன்மையடைவார்கள் என்றும் அங்கு உரையாற்றிய அமைச்சர் கூறினார்.

சரத்தெனியா எம். பி சேனதீர, அம்பலாங்கொடை எம் பி அநுராதிக திலசேகர, மாவட்ட அமைச்சர் ரூபா கருணாதிலக ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

# அமெரிக்க தூதரகத்தை எவ்வாறு முற்றுகையிட்டோம்

## புரட்சி மாணவத் தலைவர் விசேடபேட்டி

தெஹ்ரான் நவ 12

தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 24ந்தேதி ஐந்துபேர்கூடி அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிடுவது பற்றி ஆலோசித்தோம்

பின்னர் எமது யோசனையை மதத் தலைவர் அயத்தொல்லா மௌலானா கொமேய்னியிடம் தெரிவித்தபொழுது அவர் பூரண ஆதரவு தந்து எம்மை உற்சாகப்படுத்தியதுடன் எமது திட்டம் வெற்றிபெற அடிக்கடி எங்களுடன் தொழுகையிலும் ஈடுபட்டார்;

நவம்பர் மாதம் 4ந் திகதி இஸ்லாமிய ஆர்ப்பாட்டம் நடாத்தத் திட்டமிட்டதாம் இஸ்லாமிய மாணவர்களை நான்குபேர்கொண்ட குழுக்களாக தெஹ்ரான் பல்கலைக்கழகத்துக்கு வந்துசேருமாறு கூறினோம். மாணவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்ததும் தூதரகத்தை எவ்வாறு முற்றுகையிடுவது என்பது பற்றி விளக்கிக் கூறினோம். இயந்திரத்துப்பாக்கி, பிஸ்டல் போன்றவற்றை எவ்வாறு இயக்குவது என்பது பற்றி நிச்சயப்படுத்திக் கொண்டதால் அவற்றை அமெரிக்க தூதரகத்திலிருந்தே பெறமுயன்றோம். ஆனாலும் ஏற்கனவே எங்களிடம் 10 பிஸ்டல் இருந்தது

ஆர்ப்பாட்டத்தின்போது எம்மில் பலர் கொல்லப்படலாம் என்று எண்ணியிருந்த எமக்கு எதுவித எதிர்ப்பும் இல்லாதது ஆச்சரியமாகவே இருந்தது. தூதரகத்தைக் கைப்பற்றியதும் மன்னர் ஷாவை திருப்பியனுப்பாதுவிட்டால் அதிகாரிகளைக் கொலைசெய்யப் போவதாகவே அறிவித்தோம்

மன்னர் ஷா அமெரிக்காவிலேயே மரணமடைந்தால் எமது கோரிக்கையின்போது விடுக்கப்பட்ட அறிவிப்பை நிறைவேற்றுவோம் மன்னர் வேறு நாடுகளுக்குச்சென்றால் பணயக்கைதிகளைத் தொடர்ந்து வைத்திருப்போம்

ஈரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் கைப்பற்றியுள்ள ஈரான் புரட்சி மாணவர்களின் தலைவர் தூதரகவளவிலிருந்தவாறு ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியின் தமது முற்றுகை பற்றி விபரிக்கையில் மேற்கண்டவாறு விளக்கி கூறினார்.

# தமிழ்நாட்டில் பெருமழை: 5 பேர் உயிரிழந்தனர்!

(சென்னை)

தமிழகத்தில் தொடர்ந்து கடும்மழை பெய்துகொண்டிருக்கிறது.

கடந்த ஒரு வாரமாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் திருநெல்வேலியில் மட்டும் 800 குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 80 ரூபா வீதம் வழங்குமாறு தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஏரிகள், குளங்கள் உடைந்து நீர் வெளியேறியதால் வீதிகளில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. பல குடிசைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன

திருநெல்வேலி மாவட்டத்தில் 2 பெண்கள் உட்பட ஐவர் நீரில்மூழ்கியும் சுவர்கள் இடிந்து விழுந்ததாலும் மரணமானார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரிரு தினங்கள் தமிழ்நாட்டின் தென்பகுதிகளில் தொடர்ந்து மழைபெய்யும் என்று சென்னை வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ரு)

## ஆங்கிலப்பயிற்சி

(கொழும்பு)

கடந்த இரண்டு ஆண்டுகளில் நியமனம்பெற்ற புதிய ஆசிரியர்களான ஆங்கிலசேவைக்கால பயிற்சி வகுப்பு பேராதனை ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் டிசம்பர் மாத விடுமுறையின்போது நடைபெறவுள்ளது.

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள பாடவிதான அபிவிருத்திச்சபையின் ஆசிரிய கல்விப் பிரிவினரால் நடாத்தப்படவுள்ள இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு புகையிரதச் சீட்டு, தங்குமிட வசதிகள் என்பவற்றை மேற்படி சபையினர் வழங்கவுள்ளனர். (ரு)




சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறான அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி. உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2–3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டின்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6..

melADS

